CLEAN HANDS
NO CORRUPTION

# ஒழுக்கவியல் கோவை

# தூய்மையான கரங்கள்

## இலங்கை அரசதுறை அலுவலர்களின்
## ஊழலுக்கு எதிரான ஒருங்கிணையம


28/10, மலலசேகர மாவத்தை

கொழும்பு – 07

☎: # 94- 11-2508849

# துாய்மையான கரங்களின் உறுப்பினர்களுக்கான ஒழுக்கவியற் கோவை

1. பொது

(அ) **தூய கரங்களின்** உறுப்பினர்கள் எக்காலத்திலும்,

(i) அரச சேவையின் புகழ், நம்பகத் தன்மை, மற்றும் மக்களின் நம்பிக்கை என்பன அரச துறை அலுவலர்களின் இதய சுத்தியுடன் கட்டியெழுப்பப்பட்டதுடன், அதனில் சார்ந்திருக்கின்றது என்பதனை ஏற்றுக் கொள்ளுதலுடன் அதற்கு உடன்பாடாகச் செயற்படுதல்

(ii) அரச சேவையின் புகழ் மற்றும் நம்பகத் தன்மையை மேம்படுத்தும் வகையிலும் பேணிப் பாதுகாக்கும் வகையிலும் செயற்படுதல்.

(iii) அரச சேவையின் சிறப்பியல்புகளையும் அதன் அதி உன்னத பண்புகளையும் பேணிப் பாதுகாத்தல்

(iv) இவர்கள் பொதுமக்களின் சேவகர்கள் என்றும், இம்மக்களின் நலத்திற்காக அரச அலுவலர்கள் அப்பதவியை வகிக்கின்றனர் என்பதனை இடைவிடாது அவர்கள் மனதில் பதியவைத்தல் முக்கியமானதாகும்.

(ஆ) உறுப்பினர்கள் கட்டாயமாக பின்வருவனவற்றை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு உடையவர்களாவர்

(i) தங்களது பதவிக்கான கடமைகள், செயற்திறனுடனும் அக்கறையுடனும் தளரா முயற்சியுடனும் ஆற்ற வேண்டும்.

(ii) தங்களது கடமைகளை ஆற்றும் போது சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் திணைக்கள / நிறுவக விதிமுறைகளுக்கு அமைய செயற்பட வேண்டும்.

(iii) சட்டப்படியான மற்றும் நியாயமான பணிப்புரைகளை நிறைவேற்றல்.

(iv) பொது மக்கள் தங்கள் பணிகளை நிறைவேற்றிக் கொள்ள சமுகமளிக்கும் போது, அவர்களுக்கு அக்கறையுடனும், அவர்களின் தேவைகளை உயர்திறனுடனும் நிறைவேற்றல் வேண்டும்.

(v) வீண் விரயத்தை தவிர்த்தல், ஊதாரித் தனத்தை கட்டுப்படுத்தல் மற்றும் அரச வளங்களை சுய நன்மைக்கு பயன்படுத்துதலை தவிர்த்தல்.

(vi) தங்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட அரச சொத்துக்கள் அல்லது வளவுகள் அல்லது வதிவிட வசதிகளை கீழ் (sub–let) வாடகைக்கோ அல்லது துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தவோ கூடாது.

(vii) சன்மானத்திற்காகவோ அல்லது வேறெந்த காரணத்திற்காகவோ பாரபட்சம் காட்டுவதன் மூலம் சலுகைகள் வழங்குவதை தவிர்த்தல், அல்லது வேறு ஒரு உறுப்பினரை அல்லது அரசதுறை அலுவலரை வற்புறுத்தி இப்படியான ஒரு அலுவலை செய்வித்தலைத் தவிர்த்தல்.

(viii) தங்களது பதவி சம்பந்தமன கடமைகள் அல்லது அரச வளங்களை கட்டுப்படுத்தும் முறையில் தனிப்பட்ட வாக்குறுதிகளை வழங்காது விடல்.

(ix) அரச கடமைகளை மேற்கொள்ளும் போது பெறப்படும் அல்லது அணுக கூடிய ஏதாவது தகவல்களை தங்களது தனிப்பட்ட நன்மைக்காகவோ, குடும்ப அங்கத்தவரின் நன்மைக்காகவோ அல்லது நண்பர்களின் அல்லது கூட்டாளிகளின் நன்மைக்காகவோ பயன்படுத்தலை தவிர்த்தல்

(x) உறுப்பினர்கள், பணியாற்றும் நிறுவகம் அல்லது குறிப்பிட்ட திணைக்கள அல்லது அமைச்சின் தலைவரின் அனுமதியின்றி, தம் கடமைகளை மேற்கொள்ளும் போது பெறப்படும் தகவல்களை அல்லது ஆவணங்களிலுள்ள தகவல்களை கடமைகளின் தேவைப்பாடுகளுக்கு அமையாத முறையில், வெளியிடக்கூடாது.

(xi) இவர்களுக்கு ஊழல் நடவடிக்கைகள் பற்றிய எவ்வகையான தகவல்கள் கிடைக்கப் பெற்றாலும், அதனை "தூய்மையான கரங்களின்" நிறைவேற்றுக் குழுவிற்கு அறிவித்தல் வேண்டும்.

(xii) நியாயமற்ற மற்றும் ஒழுங்கீனமான முறையில் அரச சொத்துக்களை பாவிப்பதனையோ வேறு யாராவது ஒருவருக்கு மாற்றுவதையோ தவிர்த்தல் வேண்டும்.

(xiii) ஒரு உயர் அதிகாரியின் அல்லது செல்வாக்குள்ள நபரின் விருப்பு அல்லது அழுத்தம் காரணமாகவேனும், ஊழல் அல்லது சட்டத்திற்கு புறம்பான வகையில் உதவி புரிதலோ அல்லது உடந்தையாக இருப்பதையோ தவிர்க்க வேண்டும்.

(xiv) "தூய்மையான கரங்களின்" உறுப்பினராக அல்லது அரச அலுவலராக அவரின் மேல் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு துரோகம் விளைவிக்கும் வகையில் அல்லது அரச அலுவலர் என்ற ரீதியில் ஒவ்வாத வகையில் நடந்து கொள்வதை தவிர்த்தல் வேண்டும்.

(இ) அரசுடன் ஒப்பந்தம், சொத்துவ முறையான தொடர்பு, நிதிசார் அல்லது இதே போன்ற தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட / ஏற்படுத்த கருதுகின்ற நபர் ஒருவருடன், இதன் உறுப்பினர்

எவராவது அல்லது அவரது குடும்ப அங்கத்தவர் எவராவது அல்லது சிநேகிதனோ அல்லது கூட்டாளியோ எவ்வகையான வேதனத்தையோ அல்லது வேறு நன்மைகளையோ பெறக் கூடாது.

(ஈ) இதன் உறுப்பினர் எவராவது, தனது உத்தியோகபூர்வ பதவி நிலையை சாதகமாகப் பயன்படுத்தி, அவருக்கு அவரது குடும்ப உறுப்பினருக்கு அல்லது சிநேகிதனுக்கு அல்லது கூட்டாளிக்கு நன்மைகளை பெறுவதற்கு முயற்சித்தல் கூடாது. இவ்வாறான நன்மைகள், அன்பளிப்புக்கள், இலவச பிரயாணம், கணிசமானளவு விருந்தோம்பல், கேளிக்கை அல்லது தங்குமிட வசதிகளை ஏற்பாடு செய்தல் போன்றவற்றை இவை உள்ளடக்கும்.

(உ) உறுப்பினர் ஒருவர் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட அல்லது உரித்தானதைத் தவிர வேறெந்த வேதனத்தையோ, அன்பளிப்பையோ (இது காசாக அல்லது பொருளாக இருக்கலாம்) ஏற்கவோ அல்லது பெறவோ கூடாது.

(ஊ) உறுப்பினர் ஒருவர் தனது தனிப்பட்ட நிதிசார் நடவடிக்கைகள் அல்லது அவரது குடும்ப அங்கத்தவர் ஒருவரது அல்லது நண்பனினது அல்லது கூட்டாளி ஒருவரினது நடவடிக்கைகள் அவரது உத்தியோகபூர்வ கடமைகளுடன் முரண்படும் வகையில் அனுமதிக்கக் கூடாது.

இப்படியான ஒரு முரண்பாடு ஏற்படும் சந்தர்ப்பத்தில், அவர் இவ்விடயத்தை தனது நிறுவனத் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வருவதுடன், அவ்வாறான முரண்பாட்டை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

02. விருந்தோம்பல்

(அ) இதன் உறுப்பினர்கள் எவராவது, உத்தியோகபூர்வ நோக்கம் கொண்டிராத, வெளிநாட்டு தூதுவராலயங்கள் அல்லது சர்வதேச நிறுவனங்களின் பதவியணியினர் அல்லது யாராவது நபர் அல்லது

நிறுவனத்துடன் உறுப்பினர் அல்லது அவரது அலுவலகம் ஒப்பந்தங்கள் செய்து கொண்டுள்ளது. அல்லது அவரது அறிவுக்கெட்டிய வகையில், ஒப்பந்தம், சொத்துவ முறையான தொடர்புகள் நிதிசார் தெடர்புகளை அல்லது வரவேற்புகளுக்கான அழைப்புக்களை ஏற்படுத்தும் என்ற நிலையில், வரவேற்புகளுக்கான அழைப்புக்களை இராப்போசன அல்லது வேறு விருந்தோம்பல் அழைப்புக்களை ஏற்கக் கூடாது. ஏப்படியாயினும், தனிப்பட்ட தொடர்பு காரணமாக விடுவிக்கப்படும் அழைப்பை ஏற்பது சம்பந்தமாக கடுமையான முன் அவதானமும் எச்சரிக்கையும் மேற்கொள்ளப்பட வேண்டும். அவரது நிறுவனத் தலைவருக்கு இது பற்றி அறிவித்தல் வேண்டும்.

(ஆ) உத்தியோகபூர்வ வரவேற்புக்கள் அல்லது வைபவங்களில் உறுப்பினர்கள் அதி உயர் சீரொழுங்குடனும், பெருந்தன்மையுடனும் நடந்துகொள்ள வேண்டும்.

(இ) உறுப்பனர் ஒருவர் இவற்றில் சம்பந்தப்பட்ட குழுக்களிலிருந்து மதிய போசனம், இராப்போசனம் அல்லது வேறு வகையான கேளிக்கைக்கான அழைப்பிதழ்கள் ஏற்கும் போது, அவ்விருந்தோம்பல் மூலம் அவ் உறுப்பினரின் செல்வாக்கை அல்லது ஆதரவை பெறுவதாக ஒரு அபிப்பிராயத்தை உருவாக்கி மக்களின் கண்முன் அவரின் புகழை மங்கச் செய்ய முடியுமாதலால், அவ் உறுப்பினர் தற்றுணிவை மிகவும் கவனமாகப் பிரயோகிக்க வேண்டும்.

(ஈ) சகலரும் வேறுபாடின்றி கலந்து கொள்ளக் கூடிய வசதிகளுடைய சூதாட்டம், பந்தயம் கட்டுதல் போன்ற இடங்களிலோ ‘கசினோ’ அல்லது கிளப்களுக்கு ஆதரவு வழங்குதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

03. வெளிநாட்டுப் பிரயாணங்கள்

(அ) ஒரு உறுப்பினர் இலங்கைக்கு வெளியேயும், உள்@ர் பிரயாணம் மேற்கொள்ளும் போதும், தனது பதவியின் காரணமாக சுங்கம் மற்றும் அது போன்ற தேவைப்பாடுகளிலிருந்து விடுபாடுகளை (விதிவிலக்களித்தலை) கோரக்கூடாது.

(ஆ) வெளிநாடு, சர்வதேச நிறுவனங்கள் அல்லது அமைப்புக்களிடமிருந்து உறுப்பினர்கள் அழைப்பிதழ்களை பெறுமிடத்தும், அவ்வாறான அரசுகளோ அல்லது நிறுவனங்களோ அச் செலவுகளை ஏற்குமிடத்தும் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைக்கு அமையவும் சம்பந்தப்பட்ட உயர்அதிகாரிகளின் அங்கீகாரம் முதலில் பெறப்பட்ட பின்பே, அவ் அழைப்பை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

04. வெளிநாடுகளில் உறுப்பினர்களின் நடத்தை

(அ) ஒரு உறுப்பினரின் நடத்தை நாட்டினதும் அரசினதும் அரச சேவையின் மற்றும் “துாய்மையான கரங்களின்” புகழை குறைக்குமுகமாக அமையக் கூடாது.

(ஆ) உறுப்பினரிமிருந்து, வெளிநாடுகளில் எதிர்பார்க்கப்படும் நேர்மை, கௌரவம், நல்லொழுக்கம் மற்றும் நம்பகத் தன்மை ஆகியவற்றின் தரம் கடுமையான சோதனைக்குள்ளாக்கப்படும் என்பதனை உறுப்பினர்கள் மனதில் இருத்திக் கொள்ளல் வேண்டும்.

05. ஒழுக்கவியல் கோவையின் மீறல்

ஒழுக்கவியல் கோவையை மீறியுள்ளார் என சார்த்துரைக்கப்பட்டு, அதனை நிறைவேற்றுக் குழு சிறு தவறு அல்ல என ஏற்றுக் கொண்டால் நிறைவேற்றுக் குழு அவ் உறுப்பினரை எப்படி நல்லொழுக்க நெறிக்கு கொண்டு வர என்ன நடவடிக்கை மேற்கொள்ள

வேண்டும் என தீர்மானிக்கும். ஒரு உறுப்பினர் இக் கோவையை மீறும் பட்சத்தில் நிறைவேற்றுக் குழு அவரின் உறுப்புரிமை பற்றி நடவடிக்கையை மேற்கொள்ளும் அதிகாரத்தை கொண்டிருக்கும். இது ஒழுக்காற்று செயற்பாடுகளுக்கு கூடுதலாகவோ அல்லது குறைவாவோ அமையலாம்.

## 06. ஒழுக்கவியல் கோவையை மீளமைத்தல்

இக்கோவை, அரசாங்கத்தால் அரச துறை அலுவலர்களுக்கு குறித்தொதுக்கப்படும் ஏதாவது ஒழுக்கவியல் கோவையால் மீளமைக்கப்படும். மக்களின் நலனை கருத்திற்கொண்டு உறுப்பினர்கள் கண்டிப்புடன், ஒழுக்கம் பேணுமுகமாக இக்கோவையின் ஏதாவது ஏற்பாடுகளை நிறைவேற்றுக் குழு தொடர்ந்தும் பேணலாம்